Answer Key – Test 13 (3. UNIT 8 – 150 QUESTIONS)

**1)** "கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை நிறுத்தி விடுவது என்பது என் கையில் இல்லை, அது ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்களிடம் தான் இருக்கிறது" என்று காந்தி கூறிய அந்த இரு பெண்மணிகள் யார்?

A) பத்மாசினி அம்மையார் & நாகம்மையார்
B) நாகம்மையார் & கோமதி அம்மையார்
**C) நாகம்மையார் & கண்ணம்மாள்**
D) நாகம்மையார் & அலமேலு அம்மையார்

**2)** தென்னாப்பிரிக்க சத்யாகிரகத்தின் முதல் களப்பலி தில்லையாடி வள்ளியம்மை என்று காந்தியடிகள் தனது எந்தப் பத்திரிக்கையில் குறிப்பிட்டார்?

A) இந்தியன் வியூ
**B) இந்தியன் ஒப்பீனியன்**
C) இந்தியன் பிரடிக்ஷன்
D) இந்தியன் பாயிண்ட்

**3)** ருக்மணி லட்சுமிபதி அம்மையார் நினைவு தபால் தலையானது மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஆண்டு என்ன?

**A) 1997**
B) 1986
C) 2003
D) 2006

**4)** வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதால் பொதுமக்களால் நிகழ்த்தப்பட்ட கலகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) பாளையங்கோட்டைக் கலகம்
**B) திருநெல்வேலி கலகம்**
C) தூத்துக்குடி கலகம்
D) தென்னாட்டுக் கலகம்

**5)** 1916 ஜுன் மாதத்தில் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக 'திராவிடர் சங்க தங்கும் விடுதி'யை நிறுவியவர் யார்?

A) டி. எம். நாயர்
B) பி. தியாகராயர்
**C) சி. நடேசனார்**
D) ஈ.வெ. ராமசாமி

**6)** மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியதிலும், அதன் நோக்கத்தை மக்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதிலும் முக்கியப் பங்குவகித்தவர் யார்?

A) திரு.வி.க
B) கஸ்துரிரங்கன்
**C) ஜார்ஜ் ஜோசப்**
D) யாகுப் ஹசன்

**7)** தன்னைப் பின்பற்றுவோரை ஒருங்கிணைப்பதற்காக இராமலிங்க அடிகளார் நிறுவிய சபை எது?

**A) சத்திய ஞான சபை**
B) ஜீவகாருண்ய சபை
C) தியான சபை
D) ஜீவகாருண்ய சேவா சபை

**8)** அயோத்திதாசர், "திராவிட மகாஜனசபையை" எவ்வாண்டு நிறுவினார்?

A) 1885
B) 1882
C) 1887
**D) 1891**

**9)** மறைமலை அடிகளார், தமிழாசிரியராக பல ஆண்டுகள் பணிபுரிந்த கல்லூரி எது?

A) சென்னை பல்கலைக்கழகம்
B) மாநிலக் கல்லூரி
**C) சென்னை கிறித்தவக் கல்லூரி**
D) சென்னை புதுக்கல்லூரி

**10)** வைகுண்ட சுவாமிகளுடைய சமய வழிபாட்டு முறை எவ்வாறு அறியப்பட்டது?

A) சமத்துவ வழி
B) இயற்கை வழி
**C) அய்யா வழி**
D) இறைவழி

ETW ACADEMY

**11)** பெரியார், விடுதலை நாளிதழை துவங்கிய ஆண்டு என்ன?

A) 1933 B) 1934 **C) 1935** D) 1936

**12)** ம. சிங்காரவேலர், முதன்முதலில் மே தின விழாவை ஏற்பாடு செய்த ஆண்டு என்ன?

A) 1921 B) 1916 **C) 1923** D) 1918

**13)** தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ- ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை முதன் முதலில் உருவாக்கியவர் யார்?

**A) எஃப். டபுல்யூ. எல்லீஸ்** B) ராபர்ட் கால்டுவெல்

C) பரிதிமாற் கலைஞர் D) மறைமலையடிகள்

**14)** வள்ளலாரின் தீவிரமான சிந்தனைகள் பழமைவாத சைவர்களை ஆழமாகப் புண்படுத்தியதால் அவர்கள் வள்ளலாரின் பாடல்களை ______ எனக் கண்டனம் செய்தனர்.

**A) மருட்பா** B) வல்வருட்பா C) வருட்பா D) மருவருட்பா

**15)** 1925 மயிலாடுதுறை இசை வேளாளர் மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் சேராதவர் யார்?

A) திரு.வி.க B) மயூரமணி சின்னையா பிள்ளை

**C) மாயூரம் வேதநாயகம் பிள்ளை** D) எஸ்.இராமநாதன்

**16)** பூண்டி நீர்த்தேக்கம் எவ்வாறு பெயரிடப்பட்டது?

A) திருவள்ளூர் அணை B) பூண்டி சாகர்

C) பூண்டி அணை **D) சத்தியமூர்த்தி சாகர்**

**17)** இந்தியா விடுதலை அடைந்தபோது, யார் தலைமையிலான சென்னை அரசாங்கம், இந்திய விடுதலைச் சட்டத்தை பாராட்டி தீர்மானத்தை இயற்றியது?

A) டாக்டர் நடேசனார் B) பக்தவச்சலம்

**C) ஓ.பி. ராமசாமி ரெட்டியார்** D) இராஜகோபாலாச்சாரியார்

**18)** சென்னை மகாஜன சபையில் காந்தி உரையாற்றிய நாள் எது?

**A) 1896 அக்டோபர் 24** B) 1898 செப்டம்பர் 26

C) 1896 செப்டம்பர் 24 D) 1898 அக்டோபர் 26

**19)** பினவருவனவற்றுள் வ.உ.சிதம்பரனாதர் தோற்றுவிக்காதது எது?

**A) சுதேசி ஏற்றுமதியாளர்கள் சங்கம்** B) சுதேசி தர்ம சங்க நெசவாளிகள் சங்கம்

C) சுதேசி கூட்டுறவு அங்காடிகள் D) ஏதுமில்லை

**20)** பாரதியார், 1907 ஆம் ஆண்டு எந்த தமிழ் வாரப் பத்திரிக்கையின் ஆசிரியர் ஆனார்?

A) சுதேசமித்திரன் **B) இந்தியா** C) பாலபாரதம் D) சுதந்திரம்

**21)** தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு பின்னாளில் எவ்வாறு மாற்றமடைந்தது?

A) திராவிடர் இயக்கம் B) திராவிடர் கழகம்

C) திராவிடர் உரிமை இயக்கம் **D) நீதிக்கட்சி**

ETW ACADEMY

**22)** மருத்துவக் கல்விக்கு சமஸ்கிருத அறிவு அடிப்படைத் தகுதி என்று இருந்ததை ______ ஆட்சி நீக்கியது?

A) காங்கிரஸ் B) பிரிட்டி

**C) நீதிக்கசி** D) திராவி முன்னேற்றக் கழக

**23)** பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் பிரச்சாரங்களில் சேராதது எது?

A) தேர்தல் அரசியல் தவிர்ப்பு & சமூக சீர்திருத்தம்

B) சாதி ஒழிப்பு & பெண்கள் மீதான பாலின அடிப்படையிலான தடை நீக்கம்

C) மாண்பற்ற தன்மையை நீக்குவது, பரம்பரை அர்ச்சகர் உரிமை எதிர்ப்பு

**D) ஏதுமில்லை**

**24)** எம்மாநாட்டில் ஈ. வெ. ராமசாமிக்கு பெரியார் என்ற பட்டம் வழங்கப்பட்டது?

A) தொழிலாளர் மாநாடு **B) பெண்கள் மாநாடு**

C) பொதுவுடைமை மாநாடு D) திராவிட மாநாடு

**25)** இந்தியாவுடன் நடைபெற்ற _____ வணிகத்தினால் ரோமானிய நாட்டுச் செல்வம் கரைந்தது குறித்துப் பிளினி ஆதங்கப்படுகிறார்.

A) தங்கம் **B) மிளகு** C) சீரகம் D) ஓப்பியம்

**26)** அசோரகரின் கல்வெட்டுகளில் சேரர்கள் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளனர்?

A) சிவபுத்திரர்கள் B) வெண்யானை வேந்தர்கள்

**C) கேரளபுத்திரர்கள்** D) கோயம்புத்திரர்கள்

**27)** கண்ணகிக்குக் கோயில் எழுப்பிய யார் குறித்து சிலப்பதிகாரம் விரிவாகக் கூறுகிறது?

**A) சேரன் செங்குட்டுவன்** B) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

C) பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் D) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

**28)** தங்கத்தாலான தொங்கல் அணிகலன் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

**A) பொருந்தல்** B) கொடுமணல் C) பட்டணம் D) கீழடி

**29)** நெல்மணிகளைப் பதித்து அடையாளமிட்ட, சுடுமண்ணில் செய்யப்பட்ட அச்சு கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

A) பொருந்தல் B) கொடுமணல் C) பட்டணம் **D) கீழடி**

**30)** சுயமரியாதை இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டுடன் சேர்த்து நடத்தப்பட்ட மாநாடுகளில் சேராதது எது?

A) இளைஞர்கள் மாநாடு & பெண்கள் மாநாடு **B) தேவதாசிமுறை ஒழிப்பு மாநாடு**

C) மதுவிலக்கு மாநாடு D) இசை மாநாடு

**31)** அண்ணாவின் முதல் கட்டுரையான "பெண்கள் சமத்துவம்" 1931இல் எந்த இதழில் வெளியானது?

A) குடியரசு B) ஆனந்தவிகடன்

C) கல்கி **D) தமிழரசு**

**32)** பின்வரும் எந்த மாநாட்டில் அறிஞர் அண்ணா, தந்தைப் பெரியாரை முதன் முதலில் சந்தித்தார்?

**A) திருப்பூர் செங்குந்தர் இளைஞர் மாநாடு** B) ஈரோடு செங்குந்தர் இளைஞர் மாநாடு

C) சேலம் செங்குந்தர் இளைஞர் மாநாடு D) சென்னை செங்குந்தர் இளைஞர் மாநாடு

**33)** 1944-இல் எங்கு நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக்கும் தீர்மானத்தை அண்ணா முன்மொழிந்தார்?

A) ஈரோடு B) செங்கல்பட்டு **C) சேலம்** D) திருப்பூர்

**34)** அண்ணாவின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை ஒன்றிய அரசு வெளியிட்ட நாள் எது?

**A) பிப்ரவரி 03, 1970** B) செப்டம்பர் 15, 1970 C) செப்டம்பர் 15, 1969 D) மார்ச் 8, 1970

**35)** தமிழகத்தில் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலையைப் பயிற்றுவிக்கும் அரசு கல்லூரி எங்கு உள்ளது?

A) கிண்டி B) கும்பகோணம் C) காஞ்சிபுரம் **D) மாமல்லபுரம்**

**36)** 'தென்னகத்து மேரு' என அழைக்கப்படும் கோவிலைக் கட்டியவர் யார்?

A) ராஜேந்திர சோழன் **B) ராஜராஜ சோழன்**

C) குலோத்துங்கன் D) விஜயாலயசோழன்

**37)** தமிழகத்தில் மிகஉயர்ந்த விமானத்தை உடைய கோவில் எது?

A) கங்கைகொண்டசோழபுரம் **B) தஞ்சைப் பெரியகோயில்**

C) திருவில்லிபுத்தூர்ஆண்டாள்கோயில் D) திருவரங்கம் அரங்காநாதர்கோயில்

**38)** பொருத்துக:

(i) அகநானூறு - 1. பூரிக்கோ

(ii) ஐங்குறுநூறு - 2. நல்லந்துவனார்

(iii) கலித்தொகை - 3. மதுரை உப்புரிகுடி கிழான் மகன் உருத்திர சன்மன்

(iv) குறுந்தொகை - 4. புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| **C)** | **3** | **4** | **2** | **1** |
| D) | 2 | 1 | 4 | 3 |

**39)** பதிற்றுப்பத்தின் பத்துகளை பாடியவர்களை பொருத்துக:

(i) 6ம் பத்து - 1. பெருங்குன்றூர் கிழார், இளஞ்சேரல் இரும்பொறையை

(ii) 7ம் பத்து - 2. அரிசில்கிழார், தகடூர் எறித்த பெருஞ்சேரல் இரும்பொறையை

(iii) 8ம் பத்து - 3. கபிலர், செல்வக்கடுங்கோ வாழியாதனை

(iv) 9ம் பத்து - 4. காக்கைப் பாடினியார், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| **A)** | **4** | **3** | **2** | **1** |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 2 | 1 | 4 | 3 |

**40)** சிறுகதை அமைப்பிலும், ஓரங்க நாடகப்பாங்கிலும் அமைந்துள்ள எட்டுத்தொகை நூல் எது?

**A) கலித்தொகை** B) பரிபாடல் C) ஐங்குறுநூறு D) பதிற்றுப்பத்து

**41)** தமிழுக்கு மேலாக இந்தியை அறிமுகம் செய்வது திராவிடர்களுக்கான வேலைவாய்ப்புகளை மறுப்பதாக அமையுமென அறிவித்தவர் யார்?

A) இராஜகோபாலாச்சாரி **B) தந்தைப் பெரியார்**
C) பட்டுக்கோட்டை அழகிரி D) அறிஞர் அண்ணா

**42)** இரட்டைமலை சீனிவாசன் "ஆதிதிராவிட மகாஜன சபை" எனும் அமைப்பை உருவாக்கிய ஆண்டு என்ன?

A) 1839 B) 1939 **C) 1893** D) 1933

**43)** வைகுண்ட சுவாமிகள், யாருடைய ஆட்சியை கறுப்புப் பிசாசுகளின் ஆட்சியென்று விமர்சித்தார்?

A) முகலாயர்கள் B) மராத்தியர்கள்
C) சரபோஜிக்கள் **D) திருவிதாங்கூர் அரசர்**

**44)** சென்னை மாகாண முதல் சுயமரியாதை மாநாட்டுக்கு தலைமையேற்றவர் யார்?

A) பி.டி.ராஜன் **B) சௌந்தரபாண்டியன்**
C) சர்.பிட்டி.தியாகராயர் D) பனகல் அரசர்

**45)** சோழர்கால ஆட்சிமுறையை தெளிவாக எடுத்துக்காட்டும் உருத்திரமேரூர் கல்வெட்டு யாருடையது?

**A) பராந்தக சோழன்** B) உத்தமசோழன்
C) மூன்றாம் குலோத்துங்க சோழன் D) இராஜேந்திர சோழன்

**46)** பொருத்துக:

(i) அதியமான் - 1. தகடூர்
(ii) திருமுடிக்காரி - 2. மலையமா நாடு
(iii) வல்வில் ஓரி - 3. கொல்லிமலை
(iv) பாரி - 4. பறம்புமலை
(v) பேகன் - 5. பழனிமலை

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| **B)** | **1** | **2** | **3** | **4** | **5** |
| C) | 3 | 4 | 2 | 5 | 1 |
| D) | 2 | 1 | 4 | 5 | 3 |

**47)** தனது தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்து ”சீனிவாச காந்தி நிலையம்” என்னும் தொண்டு நிறுவனத்தை அமைத்தவர் யார்?

A) ருக்மணி லட்சுமிபதி
**B) அம்புஜத்தம்மாள்**
C) அஞ்சலை அம்மாள்
D) வை.மு.கோதை அம்மாள்

ETW ACADEMY

48) வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக இயக்கத்தில் சிறை சென்ற மற்றும் அபராதம் கட்டிய முதல் பெண்மணி யார்?

A) அம்புஜத்தம்மாள் B) முத்துலட்சுமி அம்மையார்

**C) ருக்மிணி லட்சுமிபதி** D) பத்மாசினி அம்மையார்

49) சட்டமறுப்பு காலத்தில் மதுரகவி பாஸ்கரதாஸ் இயற்றிய பாடல்களான, காந்தியோ பரம ஏழை சந்நியாசி, தாயிடம் அன்பில்லாத சன்மம் வீணே, நம்பிக்கை கொண்டெல்லோரும் ராட்டை சுற்றுவோம், காந்தி லண்டன் சேர்ந்தார் என்ற நான்கு பாடல்களையும் பாடி மக்களிடையே கொண்டு சேர்த்தவர் யார்?

A) எம்.ஆர்.கமலவேணி B) எஸ்.ஆர்.ரமாமணிபாய்

C) எம்.கண்ணம்மாள் **D) கே.பி.சுந்தராம்பாள்**

50) இறையுணர்வு, தேசப்பற்று மற்றும் பொதுச் சேவை ஆகிய மூன்று அம்சங்களை நோக்கமாகக் கொண்டு 1940இல் "சேவாதனம்" என்ற அமைப்பை தோற்றுவித்தவர் யார்?

A) துர்காபாய் தேஷ்முக் B) கோதை நாயகி

C) நீலாம்பிகை அம்மையார் **D) மஞ்சு பாஷினி**

51) மூவருலா என்கின்ற நூல் பின்வரும் யார் யாரை புகழ்ந்து பாடப்பெற்றது?

A) குலோத்துங்கன், விக்கிரமன், முதலாம் ராசராசன்

**B) குலோத்துங்கன், விக்ரமன், இரண்டாம் ராசராசன்**

C) குலோத்துங்கன், விக்கிரமன், பராந்தக சோழன்

D) குலோத்துங்கன், விக்கிரமன், ஆதித்த கரிகாலன்

52) சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் மற்றும் செயலாளர் முறையே?

**A) P. ரங்கையா, P. அனந்தாச்சார்லு** B) P. அனந்தாச்சார்லு, P. ரங்கையா

C) P. ரங்கையா, M. வீரராகவாச்சாரி D) M. வீரராகவாச்சாரி, P. அனந்தாச்சார்லு

53) சுயராஜ்யக் கட்சி ஆதரவுடன் 1926 இல் சென்னை மாகாண முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுயேட்சை வேட்பாளர் யார்?

**A) P. சுப்பராயன்** B) A. சுப்பராயலு C) எம். நடேசன் D) டி.எம். நாயர்

54) பெரியார் அவர்கள் ஈரோட்டின் நகரசபைத் தலைவராக பதவி வகித்த காலம் என்ன?

A) 1916 - 1917 B) 1917 - 1918 **C) 1918 - 1919** D) 1919 - 1920

55) 1867இல் சீவகசிந்தாமணி, 1898இல் மணிமேகலை ஆகிய இரண்டும் முழுமையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட பின்னணியில் மிகமுக்கியமான ஆளுமையாக இருந்தவர் யார்?

**A) அயோத்திதாச பண்டிதர்**

B) ஆறுமுக நாவலர்

C) வள்ளலார்

D) வைகுண்ட சுவாமிகள்

ETW ACADEMY

**56)** சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு தேர்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினர் யார்?

A) இரட்டைமலை சீனிவாசன் B) அயோத்திதாசர்

**C) மயிலை சின்னத்தம்பி ராஜா** D) தோழர் ஜீவானந்தம்

**57)** மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது ஒடுக்கப்பட்டவர்களை எவ்வாறு பதிவுசெய்யுமாறு வற்புறுத்தினார்?

A) சாதியற்ற பௌத்தர்கள் B) சாதியற்ற இந்துக்கள்

**C) சாதியற்ற திராவிடர்கள்** D) சாதியற்ற தமிழர்கள்

**58)** தமிழ் மொழி ஒரு செம்மொழியென்றும், எனவே சென்னைப் பல்கலைக்கழகம் தமிழை ஒரு வட்டாரமொழியென அழைக்கக்கூடாதென முதன்முதலாக வாதாடியவர் யார்?

A) உ.வே.சாமிநாதர் B) திரு.வி.கல்யாணசுந்தரனார்

**C) வி.கோ. சூரியநாராயன சாஸ்திரி** D) இராஜகோபாலாச்சாரி

**59)** தேவதசி முறை ஒழிப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்த மிகத்தீவிரமாக போராடியவர் யார்?

A) அம்புஜம்அம்மாள் B) அலமேலு மங்கை தாயாரம்மாள்

**C) டாக்டர் முத்துலட்சுமி** D) எம்.எஸ். சுப்புலட்சுமி

**60)** சென்னை மகாஜன சபையின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

A) எஸ். இராமசாமி முதலியார் B) பி. அனந்தாசாருலு

**C) பி. இரங்கய்யா நாயுடு** D) சீனிவாசப் பிள்ளை

**61)** தமிழகத்தில் சென்னை மகாஜன சபையால் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்ற நாள் எது?

A) 1928 ஏப்ரல் 20 **B) 1930 ஏப்ரல் 22** C) 1930 ஏப்ரல் 20 D) 1928 ஏப்ரல் 22

**62)** 1908 ஆம் ஆண்டு சென்னையில் மாபெரும் கூட்டத்தை நடத்தி "சுயராஜ்ய நாளைக்" கொண்டாடியவர் யார்?

A) பெரியார் **B) பாரதியார்** C) வ.உ.சிதம்பரனார் D) சுப்ரமனிய சிவா

**63)** வைகுண்ட சுவாமிகள் பற்றிய வாக்கியங்களில் தவறானதை தேர்ந்தெடு

A) திருச்செந்தூர் கோவிலுக்குச் சென்றிருந்த அவர் தெய்வீக அனுபவம் ஒன்றைப்பெற்றார்.

B) வைகுண்டர் என தன்னை அழைத்துக் கொண்ட அவர் வழிபாட்டின் போது பின்பற்றும் தேவையற்ற சடங்கு சம்பிரதாயங்களைக் கைவிடும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார்

C) நடைமுறையிலுள்ள சமயநெறிமுறைகளுக்கு எதிரான அவருடைய போதனைகள், ஒடுக்கப்பட்ட மக்களின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

**D) ~~1836~~ஆம் ஆண்டு சாதிவேற்றுமைகளை ஒழிப்பதற்காகவும் சமூக ஒருங்கிணைப்புக்காகவும் சாமித்தோப்பில் தனது தியானத்தைத் துவக்கினார். → 1833**

**64)** பிராமணரல்லாதோரின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை முன்னேற்றுவதற்காக 1916 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அமைப்பு எது?

A) சென்னை மாகாண விடுதலைக் கூட்டமைப்பு **B) தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு**

C) நீதிக்கட்சி D) திராவிடர் கழகம்

ETW ACADEMY

**65)** சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்களில் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது எது?

A) திராவிட சமுதாயத்தை சீர்திருத்துவது மற்றும் அதனை உண்மையான பகுத்தறிவுடையதாக்குதல்

**B) திராவிடர்களின் பண்டைய தமிழ் பண்பாட்டினை ~~மறுத்தல்.~~ → அவர்களுக்குக் கற்பித்தல்**

C) ஆரிய பண்பாட்டின் ஆதிக்கத்தில் இருந்து திராவிட சமூகத்தைக் காப்பாற்றுதல்

D) மூடநம்பிக்கையான நடவடிக்கைகளை நீக்குவதன் மூலம் இந்து மதத்தை சீர்திருத்துவதுடன் பிராமணர்களின் செல்வாக்கினைக் குறைத்தல்.

**66)** "திராவிட நாடு திரவிடர்களுக்கே" எனவும் முழக்கமிட்டவர் யார்?

A) மா.பொ.சி **B) பெரியார்** C) அண்ணா D) நடராசன்

**67)** "சொல்லுக சொல்லை பிறிதோர்சொல் அச்சொல்லை..... - இக்குறளில் "அச்சொல்லை" என திருவள்ளுவர் உரைப்பது எதை?

A) நீங்கள் பயன்படுத்திய பொருளில் வேறொரு சொல்

B) சொல்லுக்கு மாற்றாக வேறுசொல்

C) நீங்கள் பயன்படுத்திய சொல்லுக்கு வேற்றுமொழி சொல்

**D) மற்றவர்களால் வெல்ல முடியாத உங்களுடைய சொல்**

**68)** திருவள்ளுவர்

A) அவர் வாழ்ந்த காலத்துக்குப் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை மட்டுமே வகுத்துக் கூறியுள்ளார்

B) அவர் வாழ்ந்த காலத்திற்கு முன்பு பொருந்திய வாழ்க்கை நெறிகளை மட்டுமே வகுத்துக் கூறியுள்ளார்

**C) எக்காலத்திற்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளார்**

D) ஏதுமில்லை

**69)** ________ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.

A) மன்னன் B) பொறாமை இல்லாதவன் **C) பொறாமை உள்ளவன்** D) செல்வந்தன்

**70)** எந்நில மக்களின் தலைவன் கால்நடைகளை கவர்வதற்காகவோ அல்லது காப்பதற்காகவோ சண்டையிடுவதுண்டு?

A) குறிஞ்சி **B) முல்லை** C) மருதம் D) நெய்தல்

**71)** தமிழ் பிராமி எழுத்துக்களில் மக்களின் பெயர் பொறித்த சுடுமண் கலங்களின் துண்டுகள் பின்வரும் எந்த நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது?

A) ஃப்ரான்ஸ் B) இத்தாலி C) நேபாளம் **D) எகிப்து**

- ஓமன் நாட்டிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**72)** கொடுக்கப்பட்டுள்ளவைகளில் முத்திரை பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ள இடங்கள் யாவை?

**A) கொடுமணல், போடிநாயக்கனூர்** B) அரிக்கமேடு, கொற்கை

C) உறையூர், காஞ்சிபுரம் D) காவிரிப்பூம்பட்டினம், வசவசமுத்திரம்

- அழகன்குளம், கரூர், மதுரை ஆகிய இடங்களிலும் அவை கிடைத்துள்ளன

**73)** சுயமரியாதை இயக்கத்தின் நான்காவது மாநாடு எங்கு நடைபெற்றது?

A) திருச்சி B) மதுரை C) சேலம் **D) தஞ்சாவூர்**

**74)** சுயமரியாதை இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டிற்கு தலைமை ஏற்றவர் யார்?

**A) எம்.ஆர்.ஜெவகர்** B) ஆர்.கே.சண்முகம்

C) பனகல் அரசர் D) சர்.பிட்டி.தியாகராயர்

**75)** 1931ல் விருதுநகரில் நடைபெற்ற சுயமரியாதை இயக்கத்தின் மூன்றாவது மாநாட்டை துவங்கிவைத்தவர்?

A) டி.எஸ்.குஞ்சிதம் B) மீனாம்பாள் சிவராஜ்

**C) இந்திராணி பாலசுப்பிரமணியன்** D) நீலாவதி அம்மையார்

**76)** பொருந்தாதது எது?

A) முதற்சங்கம் - தென்மதுரை - காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை

B) இடைச்சங்கம் - கபாடபுரம் - வேண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை

C) கடைச்சங்கம் - இன்றைய மதுரை - முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை

**D) மேற்கண்ட எதுவுமில்லை**

**77)** சங்ககால பெண்பாற் புலவர் வரிசையில் இடம் பெறாதவரைத் தேர்ந்தெடுக்க?

A) ஔவையார் B) ஆதிமந்தியார்

**C) காரைக்கால்அம்மையார்** D) நப்பசலையார்

**78)** எந்த ஆண்டு நடைபெற்ற அனைத்திந்திய மகளிர் காங்கிரசு கூட்டத்திற்கு அஞ்சலை அம்மாள் தலைமை தாங்கினார்?

**A) 1931** B) 1930 C) 1932 D) 1929

**79)** தன் கணவர் ஸ்ரீனிவாச வரதன் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு கைதானவுடன் அவர் நடத்தி வந்த பாரத ஆசிரமத்தை திறம்பட நடத்தியதோடு, கதர் விற்பனையில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் யார்?

A) அம்புஜத்தம்மாள் B) முத்துலட்சுமி அம்மையார்

C) ருக்மிணி லட்சுமிபதி **D) பத்மாசினி அம்மையார்**

**80)** தண்டி யாத்திரையின் காரணமாக காந்தியின் கைதை எதிர்த்து, நெல்லையில் தனது கௌரவ நீதிபதி பதவியை துறந்தவர் யார்?

A) மார்கரெட் கசின்ஸ் B) எம்.ஆர்.கமலவேணி

C) நீலாம்பிகை அம்மையார் **D) கமலாபாய் அம்மையார்**

**81)** திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E. ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திப்பில் வாஞ்சிநாதன் சுட்டுக்கொன்ற நாள் எது?

**A) 1911 ஜூன் 17** B) 1912 ஜூலை 17 C) 1910 ஜூன் 17 D) 1909 ஜூலை 17

**82)** 1920 தேர்தலில், மொத்தமிருந்த 98 இடங்களில் எத்தனை இடங்களை நீதிக்கட்சி கைப்பற்றியது?

**A) 63** B) 72 C) 88 D) 90

83) சென்னையில் யார் தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு பிரச்சாரக் குழுவொன்று உருவாக்கப்பட்டது?

A) இராஜகோபாலாச்சாரி B) எஸ். வைத்தியநாதன்

**C) எஸ். சத்தியமூர்த்தி** D) வி.வி. சுப்ரமணியம்

84) வேதாரண்யத்தை நோக்கிய உப்பு சத்தியாகிரக பேரணி திருச்சிராப்பள்ளியில் துவங்கிய நாள் எது?

A) 1930 ஏப்ரல் 28 B) 1930 ஜூன் 13 C) 1930 ஜூன் 28 **D) 1930 ஏப்ரல் 13**

85) அயோத்திதாசர் யாரை உண்மையான பௌத்தர்கள் என வாதிட்டார்?

A) தாழ்த்தப்பட்டவர்கள்

B) பிற்படுத்தப்பட்டவர்களால் ஒடுக்கப்பட்டவர்கள்

C) சாதி இந்துக்கள்

**D) பிராமணியத்தால் ஒடுக்கப்பட்டவர்கள்**

86) பல்வேறு சாதிகளைச்சேர்ந்த மக்களை ஒருங்கிணைப்பதற்காக வைகுண்டசுவாமிகள் நிறுவிய அமைப்பு?

A) பிரம்ம சமாஜம் B) சமரச சமாஜம் C) திராவிட சமாஜம் **D) சமத்துவ சமாஜம்**

87) பெரியார் மிகுந்த நட்புகொண்டிருந்த தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமை வாதி யார்?

A) தோழர் ஜீவானந்தம் B) அச்சுத நாயர் **C) சிங்காரவேலர்** D) நம்பூதிரிபாட்

88) தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கியவைகளை தேர்க:

1. அச்சு இயந்திரத்தின் அறிமுகம்

2. திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகள்

3. தமிழில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்களின் வளர்ச்சி

4. தமிழை ஆதரித்த சமண சமயத்தின் எழுச்சி

A) 1ம் 3ம் மட்டும் B) 2ம் 4ம் மட்டும் **C) 1ம் 2ம் அட்டும்** D) 1ம் 4ம் மட்டும்

89) தமிழக அரசு திருப்பூர் குமரனின் சிலையை நிறுவியுள்ள இடம் எது?

A) திருப்பூர் இரயில் நிலைய சாலை

**B) திருப்பூர் இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பூங்கா**

C) ஈரோடு இரயில் நிலைய சாலை

D) ஈரோடு இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பூங்கா

90) இராஜகோபாலாச்சாரி கொண்டுவந்த குலக்கல்வி திட்டத்தை பெரியாரைப் போலவே கடுமையாக எதிர்த்தவர் யார்?

A) பக்தவச்சலம் B) ஓமந்தூரார் **C) காமராஜர்** D) கக்கன்

91) 1908 ஆம் ஆண்டு ஆங்கில அரசு தொடுத்த வழக்கில் யாருக்கு ஆதரவாக பாரதி சாட்சியம் அளித்தார்?

**A) வ.உ.சிதம்பரனார்** B) திலகர்

C) சுப்ரமணிய சிவா D) வாஞ்சிநாதன்

ETW ACADEMY

**92)** நீதிக்கட்சி தொடர்சியாக எவ்வாண்டு முதல் எவ்வாண்டு வரை ஆட்சியில் இருந்தது?

A) 1920 - 1936

**B) 1921 – 1937 ➔ This is Book Answer. Real Answer is 1920 to 1937**

C) 1922 - 1938

D) 1920 - 1939

**93)** இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது தந்தைப் பெரியார் எவ்வாண்டு நீதிக்கட்சியின் தலைவர் ஆனார்?

A) 1935 **B) 1938** C) 1939 D) 1936

**94)** சுயமரியாதை இயக்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் சேராதது எது?

A) சுயமரியாதை இயக்கம் அதன் இயக்க உறுப்பினர்களுக்கு சாதி துணைப்பெயர்களை துறப்பதுடன், சாதி-மத அடையாளங்களையும் கைவிட ஆணையிட்டது.

B) அது சாதியற்ற, புரோகிதர் அற்ற, சம்பிரதாய சடங்குகள் அற்ற ஒப்பந்தத் திருமணங்களை அறிமுகம் செய்தது.

C) இவ்வியக்கம் தீண்டாமைக்கு எதிராக மட்டும் போராடவில்லை, மாறாக சாதிமுறை அமைப்பு மற்றும் சாதி அடிப்படையிலான பலவீனங்கள், தனிமனிதர்கள் மீது திணிக்கப்படும் மாண்பு குறைவு நடவடிக்கைகள் ஆகியவற்றினையும் எதிர்த்து போராடியது.

**D) ஏதுமில்லை**

**95)** எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் எனும் நூல் பின்வரும் எந்த துறைமுகத்தைப் பற்றி குறிப்பிடவில்லை?

A) முசிறி, தொண்டி B) குமரி C) கொற்கை **D) மகாபலிபுரம்**

**96)** திணை என்ற கருத்து முதன் முதலாக விவரிக்கப்பட்டிருக்கும் நூல் எது?

A) திருக்குறள் **B) தொல்காப்பியம்** C) நாலடியார் D) நன்னூல்

**97)** சேர அரசர்கள் குறித்தும் அவர்களுடைய நாட்டின் எல்லைகளைக் குறித்தும் பேசும் சங்க இலக்கியம் எது?

A) பரிபாடல் **B) பதிற்றுப்பத்து** C) நற்றிணை D) நாலடியார்

**98)** அகழாய்வுகளில், தாழிகளுடன் நெல்லும் கிடைத்துள்ள இடங்களில் சேராதது எது?

A) பொருந்தல் B) ஆதிச்சநல்லூர் **C) கொடுமணல்** D) ஏதுமில்லை

**99)** இடைக்காலத்தில் மதுரையை ஆட்சி செய்தவர்களின் சரியான வரிசை எது?

**A) பிற்கால சோழர்கள், பிற்கால பாண்டியர்கள், நாயக்கர்கள்**

B) பிற்கால பாண்டியர்கள், பிற்கால சோழர்கள், நாயக்கர்கள்

C) நாயக்கர்கள், பிற்கால சோழர்கள், பிற்கால பாண்டியர்கள்

D) பிற்கால சோழர்கள், நாயக்கர்கள், பிற்கால பாண்டியர்கள்

**100)** சுயமரியாதை இயக்கத்தின் மூன்றாவது மாநாடு யார் தலைமையில் நடைபெற்றது?

A) பி.டி.ராஜன் **B) ஆர்.கே.சண்முகம்**

C) பனகல் அரசர் D) சர்.பிட்டி.தியாகராயர்

**101)** 1932இல் நடந்த தஞ்சை மாவட்ட சுயமரியாதை மாநாட்டை துவங்கிவைத்தவர் யார்?

A) நீலாவதி அம்மையார் B) அன்னை மீனாம்பாள் சிவராஜ்

**C) டி.எஸ்.குஞ்சிதம்** D) ஆர்.அன்னபூரணி

**102)** அண்ணாவின் முதல் சிறுகதையான "கொக்கரக்கோ", ஆனந்த விகடனில் வெளியான ஆண்டு என்ன?

A) 1930 B) 1932 C) 1931 **D) 1934**

**103)** அறிஞர் அண்ணா, திராவிடநாடு இதழை துவங்கிய ஆண்டு என்ன?

A) 1940 **B) 1942** C) 1943 D) 1941

**104)** ஓர் இரவு நாடகம் பற்றி, அண்ணாவை "பெர்னாட்ஷா" என்று புகழ்ந்தவர் யார்?

**A) கல்கி.கிருஷ்ணமூர்த்தி** B) பம்மல்.கே.சம்மந்தம்

C) மு.வரதராசனார் D) திரு.வி.கல்யாணசுந்தரனார்

**105)** விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் பொ.ஆ. ஏழாம் நூற்றாண்டில் முதல் குடைவரைக் கோயிலை அமைத்தவர் யார்?

A) முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் **B) மகேந்திரவர்ம பல்லவன்**

C) ராஜசிம்ம பல்லவன் D) விஷ்ணுகோபன்

**106)** 'தென்னகத்து எல்லோரா' என அழைக்கப்படும் கோவில் அமைந்துள்ள இடம் எது?

A) திருமயம் **B) கழுகுமலை** C) திருப்பரங்குன்றம் D) குன்றக்குடி

**107)** கீழ்க்காண்பனவற்றுள் சரியான விடைக் குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

1) ~~**முதலாம் இராஜராஜசோழன்**~~ – கங்கைகொண்டசோழபுரம் ➔ முதலாம் இராஜேந்திரசோழன்

2) ~~**முதலாம் இராஜேந்திரசோழன்**~~ – பிரகதீஸ்வர்கோவில் ➔ முதலாம் இராஜராஜசோழன்

3) மூன்றாம் குலோத்துங்கன் – திருபுவனம் கம்பகரேஸ்வர் கோவில்

4) விஜயாலயசோழன் - நார்த்தாமலை கோவில்

A) 1, 3 சரியானவை **B) 3, 4 சரியானவை** C) 1, 2 சரியானவை D) 1, 4 சரியானவை

**108)** நிலையாமையை உணர்த்தும் பதினென் கீழ்கணக்கு நூல் எது?

A) சிறுபஞ்சமூலம் B) ஆசாரக்கோவை

C) ஐந்திணை ஐம்பது **D) முதுமொழிக்காஞ்சி**

**109)** தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் அமைப்பினைக் கொண்ட நூல் எது?

**A) கலித்தொகை** B) பரிபாடல் C) ஐங்குறுநூறு D) பதிற்றுப்பத்து

**110)** காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிய பெரியார், சுயமரியாதை இயக்கத்தை தொடங்கிய ஆண்டு என்ன?

**A) 1925** B) 1926 C) 1927 D) 1928

**111)** தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்டு வெளியானது எப்போது?

A) 1835 **B) 1812** C) 1821 D) 1853

ETW ACADEMY

**112)** ஒடுக்கப்பட்டோரின் கோவில்நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காகப் பண்டிதர் அயோத்திதாசர் நிறுவிய அமைப்பு எது?

A) திராவிட விடுதலைக் கழகம்
B) திராவிடர்க் கழகம்
**C) அத்வைதானந்தா சபா**
D) திராவிட மகாஜனசபை

**113)** எம்.சி.ராஜா 1928இல் உருவாக்கிய அமைப்பு எது?

**A) அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம்**
B) தேசிய ஒடுக்கப்பட்டோர் சங்கம்
C) தென்னக ஒடுக்கப்பட்டோர் சங்கம்
D) அகில இந்திய ஆதிதிராவிடர் நல சங்கம்

**114)** சுயமரியாதை மற்றும் கலப்புத் திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளித்தல் என்ற தீர்மானம் இயற்றப்பட்ட சுயமரியாதை மாநாடு எது?

A) முதல் சுயமரியாதை மாநாடு, செங்கல்பட்டு
**B) இரண்டாம் சுயமரியாதை மாநாடு, ஈரோடு**
C) மூன்றாம் சுயமரியாதை மாநாடு, விருதுநகர்
D) நான்காம் சுயமரியாதை மாநாடு, தஞ்சாவூர்

**115)** செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டுக்கெனவே தனியே ஓர் அஞ்சலகம் யார் பெயரால் ஏற்படுத்தப்பட்டது?

A) பி.டி.ராஜன்
B) டாக்டர்.சுப்பராயன்
C) சர்.பிட்டி.தியாகராயர்
**D) பனகல் அரசர்**

**116)** திணையையும் சிறுபொழுதையும் பொருத்துக:

(i) குறிஞ்சி - 1. நண்பகல்
(ii) முல்லை - 2. மாலை
(iii) மருதம் - 3. யாமம்
(iv) நெய்தல் - 4. மாலை
(v) பாலை - 5. எற்பாடு

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 | 5 |
| **C)** | **3** | **4** | **2** | **5** | **1** |
| D) | 2 | 1 | 4 | 5 | 3 |

**117)** பொன்னை உருக்கும் உலைகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ள இடம் எது?

A) பொருந்தல்
B) கொடுமணல்
**C) கேரளத்தின் பட்டணம்**
D) ஆதிச்சநல்லூர்

**118)** 1921 இல் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி என்ற சிறப்பைப்பெற்றவர் யார்?

A) ருக்மணி லட்சுமிபதி
B) அம்புஜத்தம்மாள்
**C) அஞ்சலை அம்மாள்**
D) வை.மு.கோதை அம்மாள்

ETW ACADEMY

**119)** 1929-ஆம் ஆண்டில் "சென்னை இளைஞர் சங்கம்" என்ற அமைப்பை தொடங்கி இளைஞர்களிடமும், மகளிரிடமும் தேச பக்தியை ஏற்படுத்த உழைத்தவர் யார்?

A) முத்துலட்சுமி அம்மையார்
B) பத்மாசினி அம்மையார்
**C) ருக்மணி லட்சுமிபதி**
D) நீலாம்பிகை அம்மையார்

**120)** 1931இல் திருவெல்லிக்கேணியில் கள்ளுக்கடை மறியல் போராட்டத்திற்கு தலைமை யேற்றவர் யார்?

A) துர்காபாய் தேஷ்முக்
**B) வைமு. கோதை நாயகி அம்மையார்**
C) ராதாபாய் சுப்பராயன்
D) சரஸ்வதி பாண்டுரங்கன்

**121)** இக்கால அவ்வையார் என்று "திருப்பாதிரிப் புலியூர் அசலாம்பிகை" அம்மையாரை அழைத்தவர் யார்?

**A) திரு.வி.கல்யாணசுந்தரனார்**
B) மு.வரதராசனார்
C) டி.கே.சிதம்பரநாதர்
D) இரா.பி.சேது

**122)** சென்னை வாசிகள் சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு என்ன?

A) 1812
B) 1832
**C) 1852**
D) 1858

**123)** 1908இல் ஐரோப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குத் தலைமையேற்றவர் யார்?

A) சுப்ரமணிய சிவா
**B) வ.உ. சிதம்பரனார்**
C) சுரேந்திரநாத் ஆரியா
D) V. சர்க்கரையார்

**124)** சுய மரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்?

**A) தந்தை பெரியார்**
B) அறிஞர் அண்ணா
C) அயோத்திதாசர்
D) சர். பிட்டி தியாகராயர்

**125)** காங்கிரஸ் கட்சிப் பதவிகளில் வகுப்புவாரிப் பிரதிநித்துவத்தை வலியுறுத்தி, 1925 இல் எங்கு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் கொண்டுவந்தார்?

A) திருச்சி
B) செங்கல்பட்டு
**C) காஞ்சிபுரம்**
D) சேலம்

**126)** இரட்டைமலை சீனிவாசனின் சுயசரிதை நூல் எது?

A) சரித சுருக்கம்
**B) ஜீவிய சரித சுருக்கம்**
C) நித்திய ஜீவிய சுருக்கம்
D) நித்திய சரித சுருக்கம்

**127)** அயோத்திதாசர், சாக்கிய பௌத்த சங்கத்தை எங்கு நிறுவினார்?

A) இலங்கை
B) கோயம்புத்தூர்
**C) சென்னை**
D) திருவள்ளூர்

**128)** தனித்தமிழ் இயக்கத்தை (தூய தமிழ் இயக்கம்) உருவாக்கியவர் எனவ கருதப்படுபவர் யார்?

A) பரிதிமாற் கலைஞர்
**B) மறைமலை அடிகள்**
C) திரு.வி.க
D) உ.வே.சாமிநாதர்

**129)** தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றவர் யார்?

A) மறைமலை அடிகளார்
B) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
C) வி.கோ. சூரியநாராயன சாஸ்திரி
**D) ஆபிரகாம் பண்டிதர்**

ETW ACADEMY

**130)** காமராசர் தனது அரசியல் குருவாக யாரைக் கருதினார்?

A) காந்தியார் B) பக்தவச்சலம்

C) இராஜகோபாலாச்சாரி **D) எஸ். சத்தியமூர்த்தி**

**131)** தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் வசித்த மக்களை ஒன்று திரட்டும் நோக்கத்துடன் 1892ல் நிறுவப்பட்டது எது?

A) கிராம மகாஜன சங்கம் B) சென்னை மகாஜன சங்கம்

**C) சென்னை மாகாண சங்கம்** D) கிராமப்புற மாகாண சங்கம்

**132)** 1907 ஆம் ஆண்டு எங்கு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் வ.உ.சிதம்பரனார் கலந்துகொண்டார்?

A) மும்பை B) புனா **C) சூரத்** D) லாகூர்

**133)** இராமலிங்க அடிகளைப்பற்றிய பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?

A) அளப்பரியப் புலமையைப் பெற்றிருந்த இராமலிங்க அடிகளார் முறையானக் கல்வியை பெற்றிருக்கவில்லை.

B) துயரப்படும் உயிரினங்களைப் பார்த்து இரக்கம் கொள்ளாதவர்கள் கல் நெஞ்சக்காரர்கள், அவர்களின் ஞானம் மேகங்களால் மூடப்பட்டிருக்கும்" எனும் கருத்தினை முன்வைத்தார்.

C) தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார்.

**D) ~~1856இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1857இல்~~ சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார். ➔ 1866இல் ஏற்பட்ட பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867இல்**

**134)** 1852ஆம் ஆண்டு கங்காலு லட்சுமி நராஷ், ஆங்கிலேய இந்தியக் கழகத்திலிருந்து வெளியேறி தொடங்கிய அமைப்பு எது?

**A) சென்னை வாழ் மக்கள் சங்கம்** B) சென்னை வாழ் மக்கள் நல சங்கம்

C) சென்னை மக்கள் நல சங்கம் D) சென்னை பிராமணரல்லாதோர் சங்கம்

**135)** சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வ ஏடு எது?

A) புரட்சி B) உண்மை **C) குடியரசு** D) விடுதலை

**136)** நீதிக்கட்சியின் வீழ்சிக்கான மூன்று முக்கியக் காரணங்களில் சேராதது எது?

**A) ~~இந்த இயக்கமானது ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவு மக்களிடையே மட்டுமே ஆதரவு பெற்றிருந்தது.~~ ➔ ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை பிரிவு மக்களிடையே ஆதரவு பெற்றிருக்கவில்லை**

B) பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது.

C) அதன் உயர்குடியின மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம்.

D) ஏதுமில்லை

ETW ACADEMY

**137)** திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து, அண்ணா அவர்களால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது எப்போது?

A) 1948 B) 1947 C) 1951 **D) 1949**

**138)** பொருத்துக:

அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1) தீக்காய்வர்

ஆ) செத்தார் - 2) சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது - 3) கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4) உடம்பாடு இலாதவர்

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 4 | 1 | 3 | 2 |
| **D)** | **4** | **3** | **2** | **1** |

**139)** "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா / மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று" - இக்குறளில், "மருந்து" என்ற சொல்லின் பொருள் என்ன?

A) பிணி தீர்க்கும் மருந்து B) சாகாவரமளிக்கும் மருந்து

C) விருந்து **D) அமிழ்தம்**

**140)** தமிழ் பிராமி கல்வெட்டுகள் காணப்படும் பெரும்பாலான குகைகளை தமது வாழிடங்களாகக் கொண்டிருந்தவர்கள் யார்?

A) சைவ துறவிகள் B) வைணவத் துறவிகள்

C) புத்த துறவிகள் **D) சமணத் துறவிகள்**

**141)** தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட சங்க கால நடுகற்கள் காணப்படும் இடங்களில் தவறானதை தேர்க:

A) புலிமான்கோம்பை B) தாதப்பட்டி

**C) அழகன்குளம்** D) பொற்பனைக்கோட்டை

**142)** மக்கள் சுடுமண் கலங்களில் தங்களது பெயர்களை எழுதிவைத்ததன் காரணம் என்ன?

A) வருங்காலங்களில் தங்களைப் பற்றி அறிந்துகொள்ள

B) வரலாற்று எச்சமாக

**C) அது தமக்கு உரிமையானது என்பதை குறிப்பிட**

D) காரணமேதுமில்லை

**143)** பின்வருபவைகளில் ரோமானிய நாணயங்கள் கிடத்த ஊர்களில் சரியானதை சுட்டுக

**A) புதுக்கோட்டை** B) கன்னியாகுமரி

C) நாகர்கோயில் D) மானாமதுரை

ETW ACADEMY

**144)** சுயமரியாதை இயக்கத்தின் இரண்டாவது மாநாடு ஈரோட்டில் நடைபெற்ற நாட்கள்?

A) 17, 18 பிப்ரவரி 1929 **B) 10, 11 மே 1930**

C) 14, 15 மே 1930 D) 20, 21 பிப்ரவரி 1929

**145)** பெண்ணுக்கான விவாகரத்து உரிமை, கைம்பெண் மறுமணம், பெண்களுக்கு சொத்துரிமை தருதல் ஆகிய தீர்மானங்கள் இயற்றப்பட்ட சுயமரியாதை மாநாடு எது?

**A) முதல் சுயமரியாதை மாநாடு** B) இரண்டாம் சுயமரியாதை மாநாடு

C) மூன்றாம் சுயமரியாதை மாநாடு D) நான்காம் சுயமரியாதை மாநாடு

**146)** தவறான தொடர் எது?

A) பொருந்தாக் காதலைப் பெருந்திணை என்பர்

B) ஒருதலைக் காதலைக் 'கைக்கிளை' என்பர்

C) புற ஒழுக்கத்தை ஏழு திணைகளாக கூறுவர்

**D) அகத்திணை, புறத்திணை சார்ந்தசெய்திகளைத் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் விரிவாக விளக்குகிறது**

- அகத்திணை, புறத்திணை சார்ந்தசெய்திகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது

**147)** சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்ட நாலடியாரை தொகுத்தவர் யார்?

**A) பதுமனார்** B) அம்மூவனார்

C) அஞ்சில் அஞ்சியார் D) அனிலாடு முன்றிலார்

**148)** தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல்காப்பியம் எது?

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) வளையாபதி **D) சீவகசிந்தாமணி**

**149)** அஞ்சலையம்மாளை மக்கள் செல்லமாக எவ்வாறு அழைத்தனர்?

A) தென்னாற்காடு மாவட்ட ஜான்சி ராணி B) தென்னாற்காடு மாவட்ட உடையாள்

C) தென்னாற்காடு மாவட்ட குயிலி **D) தென்னாற்காடு மாவட்ட வேலுநாச்சியார்**

**150)** 1913இல் தென்னாப்பிரிக்காவில் "வால்கிரெஸ்ட் அறப்போரில்" பங்கேற்றதால் சிறைசென்று திரும்பிய தில்லையாடி வள்ளியம்மை தனது எந்த வயதில் காலமானார்?

**A) 16** B) 18 C) 20 D) 21

***

© ETW Academy